## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 13.08.2024ஆம் நாளன்று நடைபெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நகல்

**பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலகத்தில் கடந்த 12.07.2024 அன்று நடைபெற்ற Common Project Sanctioning and Monitoring Committee குழு கூட்டத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2024-2025-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 மற்றும் 15, ஜவஹர் மெயின்ரோடு பகுதியில் புதிதாக வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை | KNMT Share | ULB Share |
|---|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2024-2025 இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 மற்றும் 15, ஜவஹர் மெயின்ரோடு பகுதியில் புதிதாக வணிக வளாகம் கட்டுதல் பணி | 325.00 | 162.00 | 163.00 |

மேற்கண்டவாறு தேர்வு செய்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், மேலும் நகராட்சியின் பங்குத்தொகை ரூ.163.00 இலட்சத்தை மேற்கண்ட பணிக்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**(ந.க.எண்.1769/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 55**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.02**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி கிராமம் ரீ.ச.எண்.161/2,3,4,5pt, 6, 163/3, 4, 164/1, 2, 3,4, 5pt, 7pt, 8pt, 9, 10, 11pt, 12, 179/1, 184/1, 3, - 21.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள "பொதிகை மாநகர்" அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு (பொ) அவர்கள் அலுவலக ந.க.எண்.1236/2023/ஈ.மா-2 ல்கீழ் காணும் அரசாணைகள் படி செயல்முறை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

1) அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்.04.05.2017
2) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்.13.10.2017

3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை -2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்எ2 நாள்.30.10.2017, 31.10.2017, 07.11,2017, 17.11.2017, மற்றும் 20.,12.2017
4) அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ.4(3), நாள்.05.02.2019
5) அரசாணை ( நிலை) எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை துறை நவ4(3), நாள்.01.07.2019
6) மனுதாரர் திரு.R.மோகன்குமார், அவர்களின் விண்ணப்பம் நாள்.இல்லை, இணையதள விண்ணப்பம் எண்.Ref. DTCP/L/0123231/2017 நாள்.25.04.2018
7) மனுதாரர் திரு.R.மோகன்குமார் அவர்களின் விண்ணப்பம்.12.07.2024மற்றும் 05.08.2024

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (6)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி (ம) கிராமம், ரீச.எண். 161/2, 3, 4, 5pt, 6, 163/3, 4, 164/1, 2, 3,4, 5 pt, 7 pt, 8 pt, 9, 10, 11pt, 12, 179/1, 184/1, 3, ஆகியவற்றில் 21.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள " பொதிகை மாநகர்" அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி ம.வ/ஈ.மா(வரன்முறை) எண்.22/2023 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது,

| | | |
|---|---|---|
| **மனைப்பிரிவின் மொத்த பரப்பு** | : | **21.70 ஏக்கர் (அ) 945252.00 ச.அடி (அ) 87816.00 ச.மீ** |
| **மொத்த மனைகள்** | : | **352 மனைகள்** |
| **20.10.2016 முன்பு விற்கப்பட்ட மனைகள்** | : | **125 மனைகள்** |

(**மனை எண்**.1-3, 5-6, 8-14, 21, 27, 32-33, 43,49-50, 53-54, 55A,

55B, 57-59, 74,76-80,83-91, 95, 104-110, 112-113, 115-122, 128, 131, 136, 138-143, 146-147, 155, 163-164, 170-172, 175-180, 182-183, 186-187, 195, 201-202, 216-219, 225, 235-244, 249-256, 282-283, 285,288, 299, 301, 309, 331-332, 340)

**விற்கப்படாத மனைகள்** : **227 மனைகள்**

(மனை எண்கள். 4, 7, 15-20, 22-26, 28-31, 34-42, 44-48, 51-52, 56, 60-72, 75, 81-82, 92-94, 96-103, 111, 114, 123-127, 129-130, 132-135, 137, 144-145, 148-

154, 156–162, 165–169,173–174, 181, 184–185, 188–194, 196–200, 203–215, 220–224, 226–234, 245–246, 257–281, 284, 286–287, 289–298, 300, 302–308, 310–330, 333–339, 341–351)

**விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 368683.75 ச.அடி**

**பொது ஒதுக்கீடு**

**ஏற்கனவே உள்ளாட்சிக்கு தானமாகஒப்படைக்கப்பட்டவை**

| | | |
|---|---|---|
| ஏற்கனவே தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப்பரப்பு<br>தான ஆவண எண்.81/2010, நாள்.11.01.2011 | : | 230512.70 ச.அடி |
| ஏற்கனவே தானமாக ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு<br>(தான ஆவண எண்.81/2010, நாள்.11.01.2011 | : | 5963.34 ச.அடி |
| விற்கப்படாத மனைகளுக்கு OSR பரப்பு | : | 36868.37 ச.அடி<br>(10%) |

**உள்ளாட்சிக்கு தற்போது தானமாகஒப்படைக்கப்பட்டவை**

தான ஆவண எண் 5790/2023 நாள்.16.08.2023

| | | |
|---|---|---|
| சாலைகளின் ஒப்படைக்கப்பட்ட பரப்பு | : | 11356.675 ச.அடி |
| தற்போது ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு(மனை எண்– 22, 26) | : | 30960.26 ச.அடி |
| ஏற்கனவே மற்றும் தற்போது தானமாக ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு | : | 36923.60 ச.அடி<br>(10.01%) |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் :–**

1) **பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1 மனைகளுக்கு ரூ.500/– வீதம் 227 மனைகளுக்கு ரூ.1,15,000 செலுத்தப்பட்டுள்ளது. (ரூபாய் ஒரு லட்சத்து பதினைந்தாயிரம் ஐநூறு மட்டும்) |

2) **வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :**

வரன்முறைப்படுத்தும் கட்டணம் உரிய கணக்குத் தலைப்பில் பார்வை 1,2 மற்றும் 4ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு வசூலிக்கப்பட வேண்டும்,

அ) வரன்முறைபடுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்கு தலைப்பு :– Karuvoolam.tn.gov.in/Challan/echallan இணையதளம் வாயிலாக கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| District/ மாவட்டம் | : | Erode |
| Department Receiving Receipts / துறையின் பெயர் | : | |
| DDO Name / அலுவலக பெயர் | : | |
| Service rendering dept / துறையின் பெயர் | : | 02602 Directorate Of Town And Country Planning |
| Receipt Type | : | Others |
| Sub Type | : | Regularization |
| Acct Code | : | 021760800AT22730 |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்த மட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2 மற்றும் 4–ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்க்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செயல்முறை உத்தரவின் படி அனுமதியற்ற மனைப்பிரிவில் நகராட்சிக்கு பூங்கா மற்றும் சாலைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தானப்பத்திரங்கள் (81/2010 மற்றும் 5790/2023) மூலம் பெறப்பட்டுள்ளது, அனுமதியற்ற மனைப்பிரிவில் சாலைகள், குடிநீர் மேல்நிலை தொட்டி, மற்றும் வடிகால் வசதிகள் அனுமதியற்ற மனைப்பிரிவு உரிமையாளரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் பார்வை 7ல் காணும் கடிதத்தில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பூங்காக்கள், நகராட்சி ஆணையர் என பெயர் மாற்றம் செய்ய வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டு மேற்படி பணி நடைபெற்று வருவாதாகவும் பூங்கா இடத்தை சுற்றி வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருவாதாகவும் தெரிவித்துள்ளார்.

அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள விற்க்கப்படாத மனைகளின் பரப்பளவு 368683.75 ச.அடி (அ) 34296.16 ச.மீட்டருக்கு வரன்முறை கட்டணம். 36,01,500/– அரசு கருவூல கணக்கு Challen எண்.20240802004850 நாள்.02.08.2024ல் செலுத்தியுள்ளார். அபிவிருத்தி கட்டணம் ரூ.51,45,000 புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண்.01370100001487 UTRNO.CNRBR52024080185716110 நாள்.01.08.2024ல் மனுதாரால்

செலுத்தப்பட்டுள்ளது. ஆதலால் விற்கப்படாத மனைகளுக்கு மனை வரன்முறைப்படுத்த உத்தரவு வழங்கவும் நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1202/2023/எப்1)**

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 56**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.03**

இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் உள்ளவீடுகள், கடைகள், நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தினமும் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து செயலாக்கம் செய்யும் மையங்களில் ஒப்படைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.33552/2022/EA-2-SWM-4 ,நாள்.10.01.2023-ன் படி நிர்வாக அனுமதி பெற்று மூன்றாண்டு காலத்திற்கு இப்பணியினை மேற்கொள்ள 17.05.2023-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்ஒப்பந்தபுள்ளியில் M/s.LD Manpower Solutions, Vellore (DT), நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் ஏற்றுகொள்ளப்பட்டு அந்நிறுவனம் மூலம் இப்பணியினை ஓர் ஆண்டிற்கு மேற்கொள்ளவும் அதன் பிறகு நிறுவனத்தின் செயல்பாடுகளின் அடிப்படையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு பணிவழங்கவும் நகர்மன்ற தீர்மான எண்.87 நாள்.21.06.2023-ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினரின் பணி 31.08.2024ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் மேற்படி நிறுவனத்தின் பணியின்செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்து வருவதால் ஒப்பந்த நிபந்தனைகளின் (Tender Conditions) படியும், (Bid Documents) ஒப்பந்தத்தின் (Agreement) படியும் 01.09.2024 முதல் 31.05.2025 வரை ஆகிய ஒன்பது மாதகாலத்திற்கு அந்நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் மேலும் அந்நிறுவனத்திற்கு Tipping Fee வுடன் 10% சதவீதம் உயர்த்தி வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1316/2021/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 57**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.04**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை கண்காணிக்க ஏதுவாக அதனை சுற்றி CCTV கேமரா பொருத்தவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் அனைத்து BOV மற்றும் LCV வாகனங்களுக்கு GPS கருவி பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.65 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1303/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 58**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.05**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள 41.01 கி.மீ நீளமுள்ள சாலைகள் ROAD LEDGER-ல் சேர்க்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட மனைப்பிரிவுகளான குமரன் நகர் பகுதியில் உள்ள 190 மீட்டர் சாலை, AKR CITY பகுதியில் உள்ள 300 மீட்டர் சாலை, லட்சுமிநகர் முதல் குமரன் நகர் வரை 162 மீட்டர் நீளமுள்ள இணைப்பு சாலை, அண்ணாமலையார் நகர் பகுதியில் 83 மீட்டர் நீளமுள்ள மண் சாலை என மொத்தம் 735 மீட்டர் நீளமுள்ள சாலைகள் இந்நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலைகளை ROAD LEDGER-ல் சேர்த்த அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1305/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 59**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.06**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-2024ன் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட INCINERATOR அமைக்கப்பட்டது. மேற்படி INCINERATOR-லிருந்து வெளியேறும் புகையின் தன்மையை கண்காணிக்க EMISSION MONITORING DEVICE பொருத்தப்பட வேண்டும் என ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற Monitoring Officer ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. மேலும் EMISSION MONITORING DEVICE பொருத்தி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் Consent to Operation (CTO) சான்றிதழ் பெறவேண்டும்

எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே EMISSION MONITORING DEVICE பொருத்தவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.10 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1302/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 60**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.07</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் உலர் கழிவுகள் உரமாக்கப்பட்ட பின் விவசாயிகளுக்கு கொடுப்பதற்காக தெற்கு பக்கம் உள்ள பகுதியில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சேகரிக்கப்பட்ட உரங்கள் மழையின் காரணமாக சேதமடையாமல் இருப்பதற்காக அப்பகுதியில் புதிதாக தகர மேற்கூரை (Shed) அமைக்கவும் அதற்காகும் செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1304/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 61**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.08</u>

நகராட்சி நிர்வாகம் கட்டட வரைபட அனுமதி சுயசான்று (Self Certification) முறையில் குடியிருப்புகளுக்கு கட்டட வரைபட அனுமதி வழங்குதல் ஒற்றைச்சாளர இணையமுகப்பில் (Single Window Portal) மென்பொருள் தொகுதியை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது.

அரசாணைகள்:-

1. அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களின் கடித எண்.6942602/UD3(2) - 2024-2, நாள்.02.04.2024
2. அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களின் கடித எண்.6942602/UD3(2) - 2024-2, நாள்.25.06.2024

3. அரசாணை (நிலை) எண்.133, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(1) துறை, நாள்.18.07.2024
4. அரசாணை (நிலை) எண்.134, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [UD4(1)] துறை, நாள்.18.07.2024
5. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.18.07.2024

2024 –2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூட்ட தொடரில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்களால், அறிவிப்பு எண்.157–ல் கீழ்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது என அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களின் பார்வை 1ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"A new module integrated in the single window system will be introduced to facilitate sanction of building permissions based on self- certification, without requirement of completion certificate Plot sites upto 2500 sq.ft and built-up area upto 3500 sq.ft , for the construction of residential structures having ground or ground plus one floor will be eligible for instant registration without the requirements of building permission."

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் சுயசான்று முறையில் (Self Certification) குடியிருப்பு கட்டடங்கள் கட்ட வரைபட அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகத்துறையால் தொகுக்கப்பட்ட ஒருங்கிணைந்த கட்டணங்களின் (Consolidated Fee) விபரங்களை ஒற்றைச் சாளர இணைய முகப்பில் (Single window Portal) உடனடி பதிவு (Instant Registration) செய்திட மென்பொருள் மேம்படுத்தல் குறித்தான விவரங்களை அனுப்பி வைத்திட அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களின் பார்வை 2ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

1. இந்நேர்வில், பார்வை 3–ல் காணும் (நிலை) எண்.133, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(1)] துறை, நாள்.18.07.2024–ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019–ன் விதி எண்–2, 6 மற்றும் தொடர்புடைய இணைப்புகள் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணையின்படி

(1) விதி எண்–2 துணை விதி

105–A,ல் "சுயசான்றளிப்பு" என்பது சுய சான்றளிப்பு அல்லது சுய சான்றளிக்கப்பட்ட கட்டிடங்களின் கட்டுமானம் அல்லது புனரமைப்புக்கான கட்டிடத் திட்டம் மற்றும் தளத் திட்டம் ஆகியவை நடைமுறையில் உள்ள சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட

விதிகளுக்கு உட்பட்டு விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட சுய சான்றளிப்பு அல்லது அறிவிப்பு ஆகும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

105-Bல் "சுய சான்று அடிப்படையிலான கட்டடங்கள்" என்பதற்கு 2500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையில் 3500 சதுர அடி பரப்பளவு கொண்ட 2 குடியிருப்புகளுக்கு (2 Dwelling Units) மிகாமல், தரைதளம் அல்லது தரைதளம் மற்றும் ஒரு தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்கு உட்பட்ட கட்டுமானம் என வரையறுக்கப்ட்டுள்ளது.

(2) விதி எண்.6 -ல் துணை விதி 1-A க்குப் பிறகு பின்வரும் துணை விதி உட்புகுத்தப்பட்டுள்ளது. அதாவது:-

"(1.A) விதி 35 ன் உள்ளடக்கம் யாதாகினும், சுய சான்றளிக்கப்பட்ட கட்டடத்திற்கான திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெறுவதற்கான நோக்கத்திற்காக, விண்ணப்பதாரர் நிலத்தின் உரிமையாளராக அல்லது குத்தகைதாரர் அல்லது உரிமையாளரின் அதிகாரம் பெற்றவர், அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலம், சுய சான்றளிப்பு தொகுதி மற்றும் ஆன்லைன் வழியாக இணைப்பு XXVI க்கு உட்பட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(3) இணைப்பு XXVக்குப் பிறகு இணைப்பு XXVI சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பில் விதி எண்.6 (1-A) ன் படி சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கான விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. (அரசாணை இணைக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 4-ல் காணும் அரசாணை (நிலை) எண்.134, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(1)] துறை, நாள்.18.07.2024ல் சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி பொருந்தாது என ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை 5-ல் காணும் அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் (ந.நி.1) துறை, நாள்.18.07.2024-ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 2500 சதுர அடி வரை பரப்பளவு உள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைதளம் அல்லது தரைதளத்துடன் கூடிய முதல் தளம்) சுய சான்றின் (Self - Certification) அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி கட்டட அனுமதி (Online Building Approval) பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

4. இவ்வரசாணைகளை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் செயல்படுத்தும் போது கீழ்கண்ட வழிமுறைகளைக் கடைபிடிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(i) அரசாணையில் குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பதிவிற்கு வைத்து செயல்படுத்தமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ii) அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களை சுய சான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால், இவ்வரசாணையில் கட்டுப்படாத இதர கட்டுமானங்களுக்கு ஏற்கனவே அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்காளல் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(iii) மேலும், நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டட அனுமதி கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் மற்றும் தொழிலாளர் நல நிதி ஆகியவற்றை ஒற்றை சாளர முறையில் அனுமதி வழங்கும் நேர்வில் கட்டண நுழைவாயில் மூலம் உள்ளாட்சிக்கு பெறப்பட்ட பின்னர் அந்தந்த கணக்குத் தலைப்பில் ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் தேதிக்குள் செலுத்தி, அவ்வாறு செலுத்தப்பட்ட விவரங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5(i) சுயசான்றளிப்பு அடிப்படையில் அனுமதி பெறப்பட்ட கட்டடங்களுக்கான நில உரிமையினை (Title Deed) அனுமதி வழங்கப்பட்ட 15 தினங்களுக்குள் நகரமைப்பு பிரிவால் 100 சதவீதம் சரிபார்க்கப்பட வேண்டும்.

(ii) வருவாய் பிரிவில், சுயசான்றளிப்பு அடிப்படையில் அனுமதி பெறப்பட்ட கட்டடங்களுக்கான மனைகளுக்கான, கட்டட அனுமதி வழங்கப்பட்ட 30 தினங்களுக்குள் காலிமமை வரி வசூலிக்கப்பட வேண்டும்.

(iii) பாதாள சாக்கடை திட்டத்திற்கான வைப்புத் தொகை பொறியியல் பிரிவில், சுயசான்றளிப்பு அடிப்படையில் அனுமதி பெறப்பட்ட கட்டடங்களுக்கான கட்டட அனுமதி வழங்கப்பட்ட 30 தினங்களுக்குள் வசூலிக்கப்பட வேண்டும்.

(iv) சுயசான்று அடிப்படையிலான கட்டடங்கள் என அனுமதி வழங்கப்பட்ட கட்டுமானங்கள், 2500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையில் 3500 சதுர அடி பரப்பளவு கொண்ட 2 குடியிருப்புகளுக்கு (2 Dwelling Units) மிகாமல், தரைதளம் அல்லது தரைதளம் மற்றும் ஒரு தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்கு உட்பட்ட கட்டுமானம் என்பதை உறுதி செய்யப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட நான்கு இனங்களில் குறைபாடு

கண்டறியப்பட்டால், சம்மந்தப்பட்ட பிரிவினர், நகரமைப்பு பிரிவிற்கு தெரிவித்து, உடனடியாக கட்டட வரைபட அனுமதியை இரத்து செய்ய நகரமைப்பு பிரிவால் நடிவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என மேற்காணும் அரசாணைகளை பின்பற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.31917/2019/டிபி2 நாள்.25.07.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளதால் இதற்கான ஒருங்கிணைந்த கட்டணங்கள் (Consolidated Fee) கீழ்காணுமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Building License Fee | Development Charge | Labour Welfare Fund | Total Sq.Mtr | Total Sq.ft |
|---|---|---|---|---|
| 519/m2 | 10/m2 | 221/m2 | 750/m2 | 70/ Sq.ft |

**(ந.க.எண். 1273/2024/எப்1)**

**அலுவலககுறிப்பு:–**

**அ) மன்றம் பதிவுசெய்யலாம்**

**தீர்மான எண் : 62**

**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது**

**(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

ஒப். 13/8/24

**மேலாளர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

13/8/2024.